**<u>முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண்.720/2021 | இ.ம.எண். |
| எம்.சி.ஓ.பி.எண். | நி.வே.ம.எண். |

2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.2-ன் சாட்சியம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : பாலசுப்பிரமணியம் | | ஜாதி | : |
| த/பெ.பெயர் | : | | மதம் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| வட்டம் | : | | தொழில் | : |
| மாவட்டம் | : | | வயது | : |

<u>முதல் விசாரணை:-</u>

நான் சாட்சி சம்மனின் பேரில் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் பொருட்டு ஆஜராகியுள்ளேன். நான் ஈரோடு வருவாய் வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். சம்மனில் கேட்கப்பட்ட ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். காசிபாளையம் கிராமம், ஈரோடு வருவாய் வட்டத்திற்கு உட்பட்ட பகுதியாகும். ரங்கம்பாளையம், இரணியன் வீதி, கதவு எண்.55 -ல் வசித்து வந்த நல்லப்பன் மகன் பழனியப்பன் என்பவர் 10.01.2008 தேதியில் இறந்துவிட்டார், அவரது இறப்பானது காசிபாளையம் நகராட்சி அலுவலக பிறப்பு, இறப்பு பதிவேட்டில் பதிவாகியுள்ளது. மேற்படி பழனியப்பன் இறப்பிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகள் வாரிசு சான்று கோரி எங்களது அலுவலகத்தில் மனு அளித்ததன் பேரில் விசாரணை மேற்கொண்டு இறந்து போன பழனியப்பன் என்பவருக்கு அவரது மகன்கள் கெட்டிமுத்து, முருகேசன் இறந்து போன லோகநாதனின் வாரிசுகளான அவரது மனைவி கலாவதி, மகள்கள் கோகிலா ஹேமலதா மற்றும் இறந்து போன பழனியப்பன் மகள்கள் பாப்பாத்தி (எ) பாப்பாயி, சம்பூரணம் ஆகியோர்கள் வாரிசு என்று வாரிசு சான்று எங்கள் அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பழனியப்பனின் வாரிசு சான்று பெற்ற சமயத்திலேயே அவரது இறந்துவிட்ட மகன் லோகநாதனின் வாரிசு சான்று வழங்கப்பட்டுள்ளது. வாரிசு சான்று வழங்கும் போது கிராம நிர்வாக அலுவலரின் விசாரணை அறிக்கையின் படி தான் வழங்கப்படும். மேற்படி பழனியப்பன் என்பவருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்று,

பதிவேடு நகல் மற்றும் லோகநாதன் என்பவரது வாரிசு சான்று, பதிவேடு நகலும், கிராம நிர்வாக அலுவலர் விசாரணை அறிக்கை சம்பந்தப்பட்ட கோப்பின் நகல் தாக்கல் செய்கிறேன். அது **மூ.த.சா.ஆ.1** வரிசை ஆகும். வா.த.சா.ஆ.2 ஆவணத்துடன் இணைக்கப்பட்ட வாரிசு சான்று படி பழனியப்பன் என்பவருக்கு முருகேசன் என்பவர் மட்டுமே வாரிசு என்று வழங்கப்பட்டுள்ள வாரிசு சான்றானது எங்கள் அலுவலகத்தில் இருந்து வழங்கப்படவில்லை. அதே போல் எங்கள் அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்ட பழனியப்பன் வாரிசு சான்றில் இறந்த லோகநாதனின் மனைவி கலாவதி என்பவர் பெயர் சேர்த்து வாரிசு சான்று வழங்கப்படவில்லை. அதற்கான காரணம் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை. நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட சாட்சி சம்மனுடன் இணைக்கப்பட்ட பழனியப்பன் வாரிசு சான்று மோசடியாக தயார் செய்யப்பட்ட விபரம் தெரிய வந்தது. பழனியப்பன் என்பவரது வாரிசு சான்று மோசடியாக பெறப்பட்டது என்று முருகேசனை தவிர பழனியப்பன் இதர வாரிசுகள் ஈரோடு, வருவாய் கோட்டாட்சியரிடம் புகார் அளித்து விசாரணை நடந்து வருகிறது.

**குறுக்கு விசாரணை:-** இல்லை